International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 08 Issue: 01 January to March 2026 www.irjtsjournal.org

# சோழர்காலச் சமூக–மதப்பிண்ணனியில் தேவதாசிகளின் கலைப் பணி–ஓர் ஆய்வுப் பார்வை

கலாநிதி தாக்க்ஷாயினி பரமதேவன்

சிரேஷ்ட விரிவுரையாளர்
நடனநாடகத்துறை, சுவாமி விபுலாநந்தா அழகியற்கற்கைகள் நிறுவகம்கிழக்குப்பல்கலைககழகம்இலங்கை
Dr. Thakshayiny Paramadevan
*Senior Lecturer in Dance*
*Department of Dance Drama&Theatre Arts*
*Eastern UniversitySrilanka.*

## ஆய்வுச்சுருக்கம்

சோழர் ஆட்சி காலம் ( 9–13ஆம் நூற்றாண்டுகள் ) தென்னிந்திய வரலாற்றில் கலை சமயம் மற்றும் சமூக அமைப்புகள் சிறப்பாக வளர்ச்சியடைந்தகாலமாகும். இக்காலத்தில் கோயில்மையப் படுத்தப்பட்ட சமூக அமைப்புவலுவடைந்தது . சைவவைணவசமயப்பரப்புகளின் வளர்ச்சியோடு கோயில்கள் ஆன்மீகத்தளமாக மட்டு மன்றி , பொருளாதார மற்றும் கலைமையங்களாகவும் விளங்கின . இந்நிலையில் தேவதாசிகள் (தேவடியார்கள்) கோயில் அமைப்பின் ஒரு அங்கமாக இருந்துசமயச்சடங்குகளிலும் கலைநிகழ்வுகளிலும் குறிப்பிடத்தக்கபங்காற்றினர். தேவதாசிகள் கோயிலில் தினசரிவழிபாடுகள் திருவிழாக்கள் மற்றும் உற்சவங்களின்போதுஇசை –நடனச்சேவையை ஆற்றினர். இவர்களின் கலைப்பணி வெறும் பொழுதுபோக்காக அல்லாது தெய்வத்திற்கான அர்ப்பணிப்பாகவும் , பக்திப்பாரம்பரியத்தின் வெளிப்பாடாகவும் அமைந்தது. சோழர்காலகல் வெட்டுகள் தேவதாசிகளுக்கு நிலங்கள் பொருளாதார ஆதரவு மற்றும் சிறப்பு அந்தஸ்து வழங்கப்பட்டதை வெளிப்படுத்துகின்றன . இதன் மூலம் அவர்களின் சமூகப்பங்கு மற்றும் கலைத்திறமை அரசால் அங்கீகரிக்கப்பட்டதைக்காண முடிகிறது.

மேலும் சோழர் காலக்கோயில் சிற்பங்கள் நடனக்கரணங்களைப் பிரதி பலிக்கும் கலைச்சான்றுகளாக விளங்குகின்றன . இவைதேவதாசிகளின் நடனமரபு அந்நாளைய நாட்யசாஸ்திரக் கோட்பாடுகளோடு தொடர்புடைய தெனசுட்டுகின்றன. சமூக–மதப்பின்னணியில் தேவதாசிகள் கலைப்பணியை ஆய்வு செய்வது சோழர்காலக்கலை வரலாற்றை மட்டு மன்றி பெண்களின் சமூக நிலை சமயச்சேவை மற்றும் கலை அடையாளத்தைப் புரிந்து கொள்ளவும் உதவுகிறது . இவ்வாய்வு வரலாற்று ஆவணங்கள் கல்வெட்டுச் சான்றுகள் கோயில் சிற்பங்கள் மற்றும்

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2026, IRJTSR

தொடர்புடைய ஆய்வு நூல்களை அடிப்படையாகக் கொண்டு தேவதாசிகளின் கலைப்பணியை சமூக–மதப்பிண்ணனியில் ஆராய்கிறது.

திறவுச்சொற்கள் (முநலறழசனள)

தேவதாசிகள் / தேவடியார்கள் கோயில் அமைப்பு , சமயச் சடங்குகள், நடனச்சேவை, இசைமரபு, கல்வெட்டுச்சான்றுகள், கோயில் சிற்பங்கள் , பெண்கள் சமூக நிலை

## முன்னுரை

. கி.பி 10-13 காலமாக பல்லவர் காலத்திற்கு அடுத்துள்ள உருவாகியதுசோழர் காலம். தென்னிந்தியா முழுவதையும் கடல் கடந்து இலங்கை தென்கிழக்காசியா வரை நூற்றாண்டிலே நிலவிய சோழப்பேரரசு விரிவுற்றது.சுருங்கக் கூறின் வடக்கே கங்கை வரை தெற்கே மாலைதீவுகள் இலங்கை வரையும் தென்கிழக்கே மலேசியா இந்தோனேசியா சீன தீபகற்பம் சீனா வரையும் சோழர் புகழ் பரவிற்று என்பது வரலாறு கூறுகின்றது. இதனை தொடர்ந்து இப்பரந்த பேரரசிலே திறமையான நிருவாகம் அமைக்கப்பட்டது குறிப்பிடதக்கதாகும் தமிழிலே பெருங்காப்பியங்கள் தோன்றின வடமொழிக் கல்வி போற்றப்பட்டது.சைவ , வைணவ ,சமண, பௌத்த முதலிய சமயங்களுக்கு மன்னர்கள் ஆதரவு வழங்கினர். சிறப்பை நன்கு வெளிப்படுத்துவனவாக நுண்கலைகள் பெரு வளர்ச்சியை கண்ட மன்னரும் மக்களும் கலைகளில் அதிக ஆர்வம் கொண்டவர்களாக்காணப்பட்டிருந்தனர். என கல்வெட்டுகள் சிற்பங்கள் இலக்கிய நூல்கள் ஓவியங்கள் முதலியவற்றின் ஊடாக அறியமுடிகின்றது.

கலைகள் வளர்ந்த இக்காலத்தில் நம் பரதநாட்டியமும் பெருவளர்ச்சியை பெற்றது இதற்கு முழுகாரணமாக மன்னனின் ஆதரவுகள் காணப்பட்டாலும் தேவரடியார்களையே பக்கபலமாக அதற்கு கூறமுடியும் இ அதற்கு தகுந்த விளங்கியவர்களாக சான்றுகள் பின்வரும் பகுதிகளில் தெளிவாக ஆரயப்பட்டு கூறகூடியதாக அமைகின்றது.மேலும் சோழர் காலத்தில் நடனம் பயிலுவோருக்கு இசைஞானம் மிக அவசியமானதாகும் நெடுங்காலமாகக் கீதம் வாத்தியம் நாட்டியம் ஆகிய மூன்றும் சேர்ந்ததே சங்கீதம் என்ற கருத்து நிலவிவந்துள்ளது. இசையும் நடனமும் குறிப்பாக இறைவனை வழிப்படுவதற்கான சிறப்பான சாதனமாக கொள்ளபட்டு வந்தன இதன் பயனாக தேவாரங்கள் திருமுறைகளாகவும் திருவிசைப்பாடல்கள் கந்தபுராணங்கள் நாலாயிர திவ்ய பிரபந்தம் என்பன தொகுக்கபட்டு ஆலயங்களில் தொடர்ந்து ஒழுங்காக ஓதுவதற்கு தனிப்பட்ட ஓதுவார்கள்நியமிக்கப்பட்டார்கள் .இம் முறை பழைய புதிய கோயில்களிலும்ஒழுங்காக ஓதப்பட்டன. இது கோவில் பணி செய்யும் தேவரடியார்களாள் நிகழ்த்தபட்டிருக்கும் என்பது ஊகித்து உணமுடிகிறது.

சோழ மன்னனான முதலாம் இராசராசன் சாஸ்திரிய நடனத்திலும் இசையிலும் மிகுந்த விருப்பமுடையவன் இறைவனை ஆடவல்லனாக கண்டுகளித்தான. அப்பெருமானுக்கு இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பல கோவில்களை கட்டுவித்தவன் அவற்றின் தலைநகரான தஞ்சாவூரில்

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2026, IRJTSR 

அமைக்கபட்ட பிரகதீஸ்வரர்(தஞ்சை பெருவுடையார்)கோவில் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். இக் கோவில் அப்பெரு மன்னரின் சமயப் பற்றிற்கும் கலையுணர்விற்கும் சிறந்த எடுத்துகாட்டு சோழரின் ஆதிக்கச் சிறப்பு செல்வ செழிப்பு சமயப்பற்று கலைவளம் ஆகியவற்றை ஒருங்கே பிரதிபலிக்கும் இக் கோவில் அமைந்திருந்தது.

இக் கோவில் இடம் பெற்ற இசைகலைஞர் வாத்திய கலைஞர் இநடனக் கலைஞர் முதலியோரின் விபரங்கள் சிலவற்றை அங்குள்ள சில சாசனங்கள் எடுத்துரைக்கின்றது. இக்கோவிலிலே நடை பெற்று வந்த விழாக்களிலும் கிரியைகளிலும் ஆடுதற்கும் பாடுதற்கும் நடன மகளிர் பலர் நியமிக்கப்பட்டிருந்தன .பேரரசின் பல பகுதிகளிலிருந்தும் மொத்தமாக400 நாட்டிய மகளிரைக் கொனர்வித்து இக் கோயிலில் அவர்கள் திருப்பணி புரியும் வண்ணம் அவன் ஒழுங்கு செய்தான் என்பதை கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன."இதன் மூலம் தெளிவாகின்றது தொடர்ந்து வந்த காலங்களில் தேவரடியார்கள் மதிக்கப்பட்டு கலைகளை வளர்க்க காரணமாக இருத்தனர்.

இவ்வாறாக இசைஇ நடனம் என்பன கோவில்களில் மிகமுக்கியமானதாகவும் இறைவனை நினைந்து அருள் வேண்டி தேவரடியார்கள் மூலமாக நடாத்தப்பட்டுள்ளமையினை உணர முடிகின்றது.இது பற்றி மேலும் சில விடயங்களை ஆராய்ந்து நோக்க வேண்டியுள்ளது.

மேலும் தேவரடியார்களின் பணிகள் இ கலையை வளர்க்க மன்னர்களால் முக்கியமானதாகஆதரிக்கபட்டதை விபரிக்கும் கல்வெட்டுச் சான்றை எடுத்துக்கொண்டால் பின்வரும் தகவல்களை அறியக்கூடியதாகவுள்ளது.

உடையார் ஸ்ரீராஜராஜீஸ்வரம் உடையார் தனிச்சேரிப் பெண்டுகளாக சோழமண்டலத்துச் தளிச்சேரிகளில் நின்றும் கொண்டு வந்து ஏற்றின் தனிச்சேரிப் பெண்டுகளுக்கும் நிவந்தமாக பங்கு செய்தபடி பங்கு வழிபங்கு ஒன்றினால் நிலன் வேலியினால் ராஜகோரியேர் நோக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் நெல்லு நூற்றுகலமாகவும் இப்படிப் பங்குபெற்ற இவர்களில் செத்தார்க்கும் அவாதேசம் போணர்குத்தலைமாறு இவ்விலக்கு

. அடுத்தமுறை நடவார் இக்காணி பெற்றும் செய்யவும்...."எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இதனை தொடர்ந்து அங்கு இடம்பெற்ற நடனமாதர் இ இசைக்கலைஞர் முதலியோர்பற்றி விபரங்களைகூறுகிறது. இந்நடனமகளிர்கோவிலலை சுற்றி அவர்களுக்கெனத் தனித்தனியான தெருக்களும்இ வீடுகளும் அமைக்கப்பட்டன. பல இடங்களிலிருந்தும் கொண்டு வரப்பட்ட இவர்கள்இத்தெருக்களிலே குடியெற்றப்பட்டனர். இவர்களின் ஊதியம்ஆண்டுகளுக்கு எவ்வளவு என வரையறை செய்யப்பட்டது. இக் கோவிலுக்கு சொந்தமான நிலங்களில் இருந்து பெறப்படும் வருமானத்திலே பங்குகள் வழங்கப்பட்டன.

மற்றும் தனிச்சேரியின் நான்கு நெருக்களிலும் இருந்தோர் தொகை பின்வருமாறு கூறப்பட்டுள்ளது .அதாவது தெற்கு தனிச்சேரி தென்சிறகிலே 92

நடனமாதரும் தெற்குத்தனிச்சேரி வடசிறகிலே 92 நடனமாதரும் இவடக்கில் உள்ள தனிசேரி தென்சிறகிலே 95 நடனமாதரும் இவடக்கிலுள்ள தனிச்சேரி வடசிறகிலே 96 நடனமாதரும் இ மேலும் 25 நடனமாதருமாகமொத்தமாக 400 தனிச்சேரிப் பெண்டிர் இருந்தனர் என்பதை அறியலாம் .தொடர்ந்து தளிச்சேரிப் பெண்களாகிய தேவரடியார்களின் ஊரும் பேரும் பெற்ற பங்கும் கூறப்பட்டுள்ளன எடுத்து காட்டாகத் தெற்கு தளிச்சேரித் தென்சிறகு (முதலாவது வீட்டலிருந்து) தலை வீடு திருவையாற்று ஓலோக மகாதேவி சஸ்வரத்து நக்கன் சேர மங்கைக்குப் பங்கு ஒன்றும் இ இரண்டாம் வீடு இத்தனி நக்கன் இரணமுகராமிக்குப் பங்கு ஒன்றும். மூன்றாம் வீடு இத்தனி நக்கன் உதாரணத்துக்கு பங்கு ஒன்றும் இ நாணம் வீடு இருதன் நக்கள் பட்டாலிக்கு பங்கு ஒன்றும்இ ஐந்தாம் வீடு இத்தனி நக்கன் எடுத்தபாதத்திற்கு பங்கு ஒன்றும் இ ஆறாம் வீடு இத்தனி நக்கன் சோழகு சுந்தரிக்கும் பங்கு ஒன்றும். எட்டாம் வீடு நாகபட்டணத்துக்கு திருக்காரோணத்து தக்கன ரச கேசரிக்கும் பங்கு ஒன்றும் இ 15ம் வீடு ஜகநாதபுரத்து விக்கிம் விஜய ஸ்வரத்து நக்கன் நில்லை அழகிக்கும் பங்கு ஒன்றும் இ 18ம் வீடு திருவிடைமருதில் நக்கன் தில்லைக கரைசுக்குப் பங்கு ஒன்றும். என தொடர்ந்து கூறப்பட்டுள்ளன. அவதானிக்கலாம் "இத அவர்களுக்கு வழங்கப்பட்ட சன்மானநகர் எனவும் அது கலைகளை வளர்ப்பதற்கும்இகற்பிற்பதற்கும்வழிவகை செய்தமையை பற்றி அவதானிக்கமுடிகிறது.மற்றும் தேவரடியர்களுக்கு ஆடல் பாடல் கற்பிக்கும் ஆசிரியர் வாத்தியம் வாசிப்போர் முதலியோர் பற்றிய விபரங்களும் கிடைத்துள்ளன. எடுத்துகாட்டாக கலைஞர் அவர்கள் பெற்ற பங்கு கலம் நெல் முதலியன பற்றி சில விபரங்களைச் சுட்டிகாட்டலாம் அவையாவன.

| **கலைஞர்** | பங்கு | கலம் நெல் |
|---|---|---|
| தளச்சேவரி பெண்டிர் ஒருத்திக்கு | 1 | 100 |
| நடஞ்வம் ஒருவருக்கு | 2 | 20 |
| பாட்டுக்காரர் ஒருவருக்கு | 1 ½ | 150 |
| வீனண வாசிப்பவர் | 3 ½ | 350 |
| ஆரியம் பாடுவோன் | 3 ½ | 150 |
| தமிழ் பாடுவோன் | 1 ½ | 150 |
| வாத்தியகாரன் | | 2200 |

இவ்வாறு தஞ்சை பெருவுடையார் கோவிலில் காணப்படும் கல்வெட்டானது அங்கு கிடைக்க பெற்ற இசைகலைஞர் வாத்தியக்கலைஞர் நடனகலைஞர் முதலியோரின் விபரங்களை மிகத்தெளிவாக எடுத்துரைத்துள்ளது . மற்றும் கோவிலிலே இடம்பெற்று வருகின்ற விழாக்களிலும் , கிரிகைகளிலும் ஆடுதற்கும் பாடுதற்கும் நடன மகளிர் நியமிக்கபட்டம் 40 மகளிரை கொணர்வித்து இக் கோவிலில் இவர்கள் திருப்பணிபுரியம் வண்ணம் அவன் ஒழுதே செய்தனம் பற்றி தெளிவாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. "இது கலை வளர்த்த பெருமை மன்னனுக்கு மட்டுமல்லாது நம் தேவரடியாருக்குமே

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

பெருமையை கொடுக்கின்றது .இது தவிர தேவரடியாகள் கோவிலுக்கு செய்த பணிகள் உள்ளதமானவை தளர்சேரி பெண் திகழ்ந்த இவர்கள் பரத்திலும் இசையிலும் தேர்ச்சி பெற்று திருகோயில்களில்பணி புரிந்தனர் .கோயிலின் பாட்டு பாட பாணர்கள் அமரத்தபட்டனர். கோவில்திருவிழாக்களில் தேவரடியார் நடனமாடினர் திருவொற்றியூர் திருவாதிரை விழாவில் திருவம்பாவை ஆடப்பட்டதாகவும் தனியிலார் ஆடியதாகவும் தேவரடியார்கள் தேவாரபதிகங்கள் அகமார்க்கமுறையில் பாடினார்கள் என்றும் இக்கால வரலாறு கூறுகின்றது.

மேலும் இந்த முறையில் இன்னவை பாடவேண்டும்என வலியுருத்தும் உரிமை தேவரடியார்களுக்கு இருந்தது இவ்வரிமையை அவர்கள் விற்றும் வந்தனர். திருக்கோயில்களில் இறை தொண்டிற்காகவே தங்கள் வாழ்நாளை எல்லாம் அர்பணித்து கொண்டனர்.அவர்களது வருவாயில் பெருபங்கு கோயில் வழிப்பாடு முதலியவற்றுக்காகவே செலவிடப்பட்டது. என்று முகமதிய எழுத்தாளர்கள் வியப்புடன் தெரிவிப்பதில்அறியலாம் . மேற்கூறிய கல்வெட்டு இவர்களுக்கான ஊதியங்கள் ஒவ்வொருவருக்கும் பங்கு பிரித்து கலம் நெல் விளையும் பூமிகளை வழங்கப்பட்டமையை அறியலாம்.தேவரடியார்கள்கோவில்பணியில் இருந்துவேறு நாட்டிற்கு சென்றாலேஅக்குடும்பத்தில் நடனத்தில் தேர்ந்த மற்றொரு பெண் பதிலாக நியமிக்கப்ட்டாள்.என்றும் சோழர் காலத்தை அடிப்படையாக வைத்து தஞ்சை பெருவுடையார் உள்ள ஓவியங்கள் சிலவற்றினே நேர்த்தியான நடனமாதர் உருவங்கள் சில நன்கு வரையப்பட்டுள்ள . மேலும் விண்ணுலக இமண்ணுலகநாட்டிய நிகழ்ச்சிகளை சித்தரிக்கும் ஓவியங்களும் நாட்டியசாஸ்திர மரபை பிரதிபலிக்கின்றன.

மேலும் சோழர் காலத்தின் இக்கோவிலில் இடம்பெற்ற நடனம் நாடகம் பற்றிச்சமகால திருவிசைப்பா ஆசிரியர்களுள் ஒருவரான கருவூர் தேவர் பின்வரும் அடிகள் மூலம் சிறப்பித்துள்ளார்.

"பின்னரும் புருவத்து கிளியை மயிலனையார்

விலங்கல் செய் நாடக சபை

இந்நாடகம் பயிலும் இஞ்சிகழ்

தஞ்சை இராசராசேசக்கரத்திக்கே..."

மேலும் அத்தியூர் அருளாள பெருமாள் கோயிலிலே 3ம்குலோத்துங்கன் 200மகளிரைத் திரிபுவன வீரன் பதியிலார் என்ற பெயராம் குடியிருக்க செய்தான் என கல்வெட்டும் கூறுகின்றது திருவாவடுதுறையில் உள்ள திருக்கோயில் ஒன்றிலே நானவித நடனசாலை ஒன்று இருந்ததாக 1ம்குலோத்துங்கன் காலசாசனம் ஒன்று கூறப்படுகின்றது.எனவே சோழர்காலத்தின் பெரும் கலைஉணரவு பிக்கதாகவும் கலையை வளர்ப்பதற்கு பெரும் பங்களிப்பினை தஞ்சை பெருவுடையார் கோயில் மூலம் தேவரடியார்கள் மேற்கொண்டிருந்தனர் என்பதை கொண்டு பரதநாட்டிய வளர்ச்சிக்கு முற்றும்முழுதாக பாடுபட்டுவளர்ந்தவர்கள் தேவரடியார்கள்தான் என்பதை ஆராய்ந்து உணரவைக்கின்றது . தஞ்சை பெருவுடையார் கோயில்

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2026, IRJTSR 

யோக நிலையில் உள்ள தட்சிண ா மூர்த்தியும் அருகே இரு கன்னியரும் இருப்பது போன்ற ஓவியம் காணப்படுகின்றது இவ்ஓவியம் 11ம் நூற்றாண்டை சார்ந்தது மற்றும் இக் காலத்தில் திரி புவணம் தாரசுரம் எனும் ஊர்களில்உள்ள கோயில்களில் நடனம் படும் நிலையில்சிவனும் பாடலை பாடுபவர்களும்,மத்தளம் வாசிப்பவர்களும் சிற்பங்களில் காணப்படுகின்றனர். இதன் மூலம் பரதநாட்டியத்தினை தேவரடியார்கள் தம்மை அர்ப்பணித்து வளர்த்துள்ளனர் என்பது தெளிவாக விளங்குகின்றது.

இவ்வாறு இக்காலத்தில் வாழ்ந்த தேவரடியார்கள் கோயில்களில் பணி அமர்த்தப்பட்ட தனியிலார் தேவரடியார் போன்றோராக கடமைகளையும் மேற்கொள்ளப்பட்ட சேவைகளையும் கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டுள்ளன.கோயில் பணிகளுக்கென நியமமிக்கப்பட்டவர்களை தனியிலார் என்றும் கூறுவது மரபு. தனி இல ஆர் என பகுத்து தனி என்றால் கோவில் இல் என்றால் வீடு என கொண்டு கோவிலையே வீடாக கொண்டு பெண்கள் பலர் இருந்தனர் என்று சோழ வரலாறு கூறுகின்றது.மேலும் தனியிலார் என்பது பொதுவான பெயர் ஆகும்இவர்கள் சிவன் கோயிலை சார்ந்தவர்கள் எனில் ருத்ர கணிகை என்றும் திருமால் கோயிலை சார்ந்தவர் எனில் ஸ்ரீமாணிக்கம் என்றும் இவ்விருவரும் இறைபணி செய்து வந்தமையால் தேவரடியார் என்றும் கூறப்பட்டனர்.

மற்றும் கோவிலில் பணி செய்யும் தனிபெண்டுகள் எனக்கூறுகின்ற தேவரடியார்களை 7வகையாக பகுத்தனர். அதாவது

1.கோயிலில் இறைவனுக்கு மலர்மாலை கட்டுதல்

2.சந்தனம் இழைத்தல்

3.சுண்ணம் இடித்தல்

4.இறைவனுக்கு அலங்காரம் செய்ய ஆடை அணிகளை பராமரித்தல்

5.கோயில் விழாக்காலங்களில் இறைவன் முன் பாடல்

6.இசைக்கருவிகளை இசைத்தல்

7.நடனமாடுதல் போன்ற செயல்களை செய்தல்

என்பன இவர்களுக்குரிய கடமையாகும் . இச்செயல்களை செய்யும் தனிபெண்களுக்கு அரசே மாத ஊதியம் வந்ததாக கல்வெட்டுகள் கூறியுள்ளமையை அறிந்தோம்.கோயில்களில் நடனமாடும் பெண்களான தேவரடியாருக்கு மன்னன் நிலக்கொடை வழங்கியுள்ளார் .அத்துடன் கோயில்களில் பணிக்கென பெண்கள் தாமே வருவதும் பெற்றோர்களால் அனுப்பபடுவதும் கோயில் நிருவாகத்தால் வாங்கபடுவதும்உண்டு . மேலும் பகைநாட்டில் இருந்துகொண்டு வரப்பட்ட பெண்களை கோயில் பணியில் அமர்த்துவதும் உண்டு இவ்வாறு வந்த பெண்கள் - கொண்டிகள்எனஅழைக்கப்பட்டனர். இதன் மூலமும் கலை வளர்ச்சிக்கு ம்



© 2026, IRJTSR

எழுச்சிக்கும் தேவரடியார்கள் சிறு வயதிலிருந்தே பங்களிப்பினை செய்ததுள்ளனர் என்பதை உணரமுடிகின்றது.

மேலும் கோயில் பணியில் உள்ளவர்கள் திருமணம் செய்து கொண்டுள்ளனர்.திருமணம் செய்து கொண்ட பின் கோயில் பணிகளில் இருக்கக்கூடாது சோழர் படைத்தலைவன் ஒருவன் தனியிலாரை (தேவரடியாரை ) மணந்த செய்தி கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றும் தளிச்சேரி பெண்கள் கோயிலுக்கு ஆபரணத்தை தந்த செய்தியும் உள்ளது. சோழர் காலத்தில் இத் தளிப்பெண்கள் உயர்நிலையில் இருக்கப்பட்டிருந்தனர்.இக்காலத்தில் தேவரடியார்கள் இறைமுன்புஆடலையும், பாடலையும் நிகழ்த்துவர் .அவர்கள் நடன கலைகளிலும்இசைக்கலையிலும் வல்லவராக விளங்கியமை ஏற்கனவே கூறியது போல் அதனை தவிர இக்கலைகளை கற்றுதரும் ஆசான்களாக விளங்கினர்.மன்னனை சார்ந்தோர்களுக்கு அரண்மனைகளில் நாட்டியத்தைகற்று தந்தனர் . இவர்கள் கோயில் ஆடுவோர் , மன்னன் சபையில் ஆடுவோர் என இரு பிரிவில் இருந்து நடனக்கலையினை விதிமுறைகளுக்கும் பணிபாட்டிற்கும் ஏற்றவகையில் தம்மை அர்ப்பணித்து முற்றும் முழுதான வளர்ச்சிக்கு காரணமாக விளங்கியுள்ளர் எனலாம்.கோவில்களிலே தமிழ் கூத்து ஆரியக்கூத்து , சாக்கைகூத்து,சாந்திகூத்து என பல வகையான கூத்துகளில் தேர்ச்சி பெற்ற நாட்டிய ஆசிரியர் கூத்தரசன் நிருத்தப்பேரரையன் ,சாக்கை மாராயன் , நட்டுவஆசன் எனப்பலபெயர்களால் அழைக்கப்பட்டனர் அவர்கள் பெற்றிருந்த காணி கூத்தகாணி,நட்டுவகாணி என வழங்கப்பட்டது.

மேலும் முன்னர் கூறியது போல் திருமுறைபாடல்கள் இசையுடன் நடனத்துடனும் பயிலபட்டன. ஆடல் பாடலில் திறமையுள்ளகலைஞர் இத்தகைய பாக்களை பாடி அவற்றை நடனத்திலும் அபிநயித்து காட்டினர் . மக்களை கவர்ந்தனர்.நாட்டிய திறமையுள்ள கலைஞர் அரசன் முன்னிலையில் ஆடித்தலைகோலிபட்டம் பெற்றமையை சிலப்பதிகாரம் தொடக்கம் அறியக் கூடியதாக இருக்கின்றது. தொடர்ந்து பல்லவர் சோழர் காலத்தில் இவ்வழக்கு பெண்கள் நிலவிற்று எடுத்துகாட்டாக 1ம் பராத்தகன் கால கல்வெட்டு ஒன்று(10ம் நூற்றாண்டு) மும்மூடி சோழ தலைக்கோலி பற்றி குறிப்படுகின்றது நாட்டியம் ஆடிவந்த பெண்கள் பெயர்களிலிருந்தும் சில செய்திகள் அறியப்படுகின்றன.ஐந்நனூற்றுவத் தலைக்கோலி வீராபரண தலைக்கோலி முதலியவற்றுள் இருந்தும் தலைக்கோலி பட்டம் வழங்கபட்டதை அறியலாம். மற்றும் பெண்கள் இருபாலரும் நாட்டியம் ஆடினர்.நாட்டியம் ஆடியபெண்கள் சிலர் கோவிலில் ஏற்படுத்தியிருந்தனர்."எனவே வழிப்பாட்டிற்குரிய நடனகலையை நிவந்தங்களை ஆதரித்த மன்னர்கள் இக்கலையினை வளர்த்த கலைஞருக்கு ஊக்கப்படுத்தியும், கௌரவித்தும் மேலும் பரதகலையை வளர்த்துகொள்ள ஆர்வத்தை தூண்டியுள்ளனர் என்பதை ஆராய்ந்ததன் மூலம் அறியமுடிகின்றது.

நடனத்தை வளர்த்தவர் பலர் அரசகுலத்தை சேர்ந்த சிலரும் நடனமணிகளாக விளங்கினர். ரவிகுல மாணிக்காஸ்வரர் கோவிலிலே ராஜராஜனின் சகோதரி

குந்தவை நடனமாடுவதை போன்ற சிற்பம் உண்டு .ஆடலையும் பாடலையும் வளர்த்தவர்களில் முற்று முழுதான காரணமாக இருந்தவர்கள் என்றால் தேவரடியார்களைத்தான் குறிப்பிட்டு கூறமுடிகிறது. மேலும் இக்காலத்தில் இவ்வாறு பரதம் வளர்த்த தேவரடியார்கள் கோவில்களில் கரணசிற்பங்கள் உருவாகவும் பெருதவியாக இருந்திருக்கலாம் என் ஊகிக்ககூடியதாக இருக்கிறது.இதற்கு எடுத்துகாட்டாக ராஜராஜனின் 108கரணங்களை (சிவதாண்டவங்களை)தனது கலைகோவிலில் அமைந்துள்ளான். அவற்றுள் துரதிஸ்டவசமாக அமைக்கபடவில்லை.எனினும் கலைகளை அழிவில் இருந்து பாதுகாக்கும் முயற்ச்சியும் ஆர்வத்தையும் தெளிவுபடுத்துகின்றது.

இவ்வாறு இவ்வரசன் தொடக்கிய திருப்பணிமுன்மாதிரி தொடர்ந்து கும்பகோணம் சாரங்கபாணி திருவண்ணாமலை கோவில் சிலம்பரம் நடராஜ கோவில் கோவில் அருணாசலேஸ்வரன் விருத்தாசலம் விருத்தகிரீஸ்வரன் கோவிலாகிய பெரிய கோவில்கள் சிலவற்றிலே நன்கு பின்பற்றபட்டன. நடன கலைக்குரிய ஆதரவும் தொடர்ந்து நிலவியுள்ளது. மேலும் ஆடல் வல்லனாக நடராஜபெருமானேயே வணங்கியுள்ளனர் .அதற்கான ஆடல் சான்றுகள் கோவில்களில் செம்புகல்லிளான அமைக்கபட்டிருந்ததிலிருந்து ஊகிக்க முடிகின்றது.இவ்வாறு இக்காலத்திலேயே தேவரடியார்களால் முற்றும் முழுதான அர்பணிப்பினால் வளர்க்கப்ட்ட இசை நடனம் பற்றி சமகாலத்திய சீவகசிந்தாமணி கம்பராமயணம் பெரியபுராணம் நந்தபுராணம் முதலிய பெரும் தமிழ் நூல்களிலேயே குறிப்புகள் காணப்படுகின்றன அதனை பின்வருமாறு ஆராய்ந்து நோக்குவோம்.

"கையெங்கு செல்கின்றதோ **கண்** அங்கு செல்லும்

கணியெங்கு செல்கின்றதோ மனம் அங்கு செல்லும்

மனம்யெங்கு செல்கின்றதோ பாவம் அங்கு செல்லும்

பாவம்மெங்கு செய்கின்றதோ ரஸம் அங்கு ஏற்படும்.

எனஅபிநயதர்பணத்திலும்

"கைவழி நயனம் செல்லக் கண்வழி மனமும் செல்ல

ஐயநுண்ணியார் ஆடும் ஆடக அரங்கு கண்டார்".

என கம்பராமயணத்தில்நடனத்தினை

அரங்கில் செய்யும் முறையினை எடுத்தும் கூறப்பட்டுள்ளது.

சோழர் காலத்தில் பலவித நடன சாலைகளை அமைத்து அவற்றின் மூலம் நடனக்கலையினை வளர்த்த முறையினை 1வது குலோத்துங்கோ மன்னன் கலத்து கல்வெட்டிலிருந்து அறியக்கூடியதாய் உள்ளது. தஞ்சை பெரிய கோவிலின் நடனக்கலை பற்றி கருவூர் தேவர் இராசராசுச்சரத் திருப்பதிகத்தில் பின்வருமாறு பாடியுள்ளனர்.

""மின்னெடும் புருவத்தின் மயிலனையார்

விலங்கல் செய் நாடக சாலை

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

இந்நடன பயிலும் இஞ்சி நழ்

தஞ்சை இராசராசேச்சரத்திவர்கே."

எனவும் தொடர்ந்து 3ம்குலோத்துங்கன் தனது காலத்திலே 200மகளிரை திரிபுவனவீரன் பதியிலார் என்னும் பெயரால் காஞ்சிஅத்தியூர் அருளாளபெருமான் கோயிலிலே குடியிருக்கசெய்தான் என ஒரு கல்வெட்டு கூறுகின்றது." இது காலத்திலும் கலை வளர்க்கும் தேவரடியார்கள் காரணமாக வளர்ப்பதற்கு அடிப்படை நோக்கமாகவும் இவனது நடனக்கலையினை விளங்கியுள்ளனர் எனலாம்.மேலும் பெரிய புராணத்தில் தேவரடியராகிய நடன பெண்கள் நடனமாடிய விதத்தை விளக்கும் வரிகளையும் காணக்கூடியதாகவுள்ளது.

"கற்பகப் பூந்தளிரபி போங்காமரு சாரிகை செய்ய

உற்பலமென முகிழ் விரல் வட்டணையோடும் கைபெயர்ப்

பொற்புருமகையின் வழிப்பொரு கயற்கண் புடைபெயர

அற்புதப் பொற்கொடி நுடங்கி ஆடுவது போல் ஆடினார''

எனக் கூறியமையும் நடனக்கலை வளர்ச்சியும் அது சமூகத்தில் மதிக்கப்பட்ட நிலையினை உணரலாம்.

கி.பி 13ம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட கந்தபுராணத்திலே இசை நடனமாகியன பற்றி சில தகவல்கள் குறிப்பாக காஞ்சி நகர வருணயிலே வருகின்றன. ஒரு செய்யுளிலே இசையும் நடனமும் சிவபிரானுக்குரியனவே என கருதப்பட்டமையினைபின்வரும் அடிகள் குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது.

நாட்டியச் செயல் யாவையும் சிவனது நடனம்

பாட்டிசைத்திறன் யாவையு மன்னாதே"

எனவும் தொடர்ந்து தேவலோக நகரை விநகம் காஞ்சியின் சிறப்புக்களிலே இசையும் நடனமும் முக்கிய இடம் வகித்தன என்பது

"பண்ணினோசையும் பாலை வென்றிடுங்

கண்ணினார் களிநடனவோசையுந்

தண்ணரம்பிய தந்திரி யோசையும்

விண்ணுளோர்க்கும் விருந்தொலையவே"

போன்ற செய்யுவகளாலும் அறியப்படும். இத்தகைய பல்வேறு நூற்சான்றுகள் சாசனங்கள் சிற்பங்கள் ஓவியங்கள் முழுவதும் நடன கலைபற்றிய செய்திகள் வரலாற்று சான்றுகளாக விளங்குகின்றன இவையனைத்திலும் தேவரடியார்கள் பற்றிய செய்திகள் இல்லாமல் எழுதப்படமையானது மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது.

## முடிவுரை

அதாவது பரத கலை இறைவனின் மு ன் சமர்ப்பிக்கபட்டது போல் மன்னர்களின் மு ன் ஆடப்பட்டுள்ளது .இதன் பயனாகவே மன்னர்களின் தேவரடியார்களை ஆதரித்து இக்கலையினை பாரம்பரியம் என்பன மாறாது எழுச்சியடையவும் வளர்ச்சி காணலம் உந்து சக்தியாக அமைந்ததினை குறிப்பிடதக்க விடயமாகும் மற்றும் இன்றும் அழியாத ஓவிய சிற்ப கல்வெட்டுகள் இலக்கணநூல்கள் காப்பியங்கள் இ தேவார திருமுறைகள் மூலம் தெளிவாக உணரக்கூடியதாக அமைகின்றது இது இந்திய இலங்கையிலும் மாறாத மறக்காத கலை வளர்ச்சி காலமாக நினைவில் வைக்கப்பட்டுவருகின்றது. சோழப் பெருமன்னர் கட்டிட கலை வளர்க்கபட்டதன் தைைமயை காணலாம். இசை நடனம் சிற்பம் ஓளியம் கால நடனக்கலையான முற்றும் முழுதாக வாத்தியம் எனப்பல்வேறு கலைகள் வளர்க்கப்பட்டு ஆதரிக்கபட்டுள்ளன இதனால் கலைகளின் பொற்காலம் சோழர்காலம் என கூறுவதும் உண்டு.மேலும் முன்னர் கூறிய பதிகளில் தேவரடியாரின் தோற்றம் சேவைகள் சமூக நிலை என்பவற்றை கொண்டு பிற்காலத்தின் தொடர்ச்சியில் அவர்களுக்கென மதிப்பும் மரியாதைகளும் கொடுக்கபட்டதுடன் முழுஅர்பணிப்புடன் பரதகலையினை அதாவது கோயில்களிலும் அரசசபைகளிலும் நாட்டியத்தினை பொதுஇடங்களிலும் வளர்த்துள்ளனர். இது சோழர் காலத்திலும் மிகவும் ஆர்வத்துடனும் ஆதரவுடனும் வளர்க்கப்பட்டுள்ளது.முன்னர் உள்ள சங்க சங்கமருவிய மற்றும் பல்லவர் காலத்தில் இல்லாத ஒரு கலைவளர்ச்சி சோழர் காலத்தில் காணப்பட்டுள்ளது என்பதை ஆதாரங்கள் எமக்கு காட்சியளிக்கின்றன.

எது எவ்வாறாயினும் ஒரு கலை வளர்வதற்கு முழுக் காரணமாக இருந்தவர்களை என்றும் நினைவில் வைக்கபடுதல் கலைநனுக்குரிய பண்பாகும். அந்த வகையில் சோழர் காலத்தில் வாழ்ந்த தேவரடியார்கள் தம் வாழ்வை அர்பணித்து வாழ்வின் இறுதி வரை பரதக் கலையினை வளர்க்க காரணமாக இருந்தனர் என்பதை தெளிவாக கூறக்கூடியதாக அமைகின்றது.

## உசாத்துணை நூல்கள்


[1] இரகுராமன். சே. (2006) தமிழர்நடனவரலாறுவானதிபதிப்பகம் சென்னை.

[2] இராசா. பா. (2001) தமிழர் நாட்டிய மரபில் பரதநாட்டியம்,பாவேந்தர்பதிப்பகம்சென்னை.

[3] இராசமாணிக்கர். பா. (1987) தமிழர்கலைகள்,கற்பகம் அச்சகம்சென்னை.

[4] கலாராணி. பா. (2004) தஞ்சை வளர்த்தபரதக்கலைசந்தோஷ்ஆப்செட் பிரிண்டர்ஸ்தஞ்சாவூர்.

[5] கார்த்திகா கணேசன் ( 1979)காலந்தோறும் நாட்டியகலை , பூபாலசிங்கம் புத்தகசாலைசெட்டித்தெரு கொழும்பு.

[6] சிவசாமி. வி. (2005) பரதக்கலையாழ்ப்பாணம்.

[7] பத்மநாதன். சி.(2006) சோழர்காலத்து கோயில்களும் சமூகமும்,குமரன் பதிப்பகம் கொழும்பு.

[8] மகேந்திரன். சி. ( 1979) தொன்மைச்சான்றுகள் புலப்படுத்தும்ஆடலமைதி ,பூபாலசிங்கம் புத்தகசாலைகொழும்பு.

[9] மகேஸ்வரன். வ.( 2011) உருத்திரகணிகையர் கதாசரத்திரட்டுஇந்து கலாச்சார அலுவல்கள் திணைக்களம்கொழும்பு.